George Bennard, 1913



பாமாலை 479 தூரமாய் மலையில்

1 தூரமாய் மலையில்

தோன்றுதோர் சிலுவை

அவமானத்தின் மா
சின்னமாய்

அதை நான் நேசிப்பேன்

அன்பர் தொங்கியதால்

அவர் பாவிகட்காய் மரித்தார்

பல்லவி

அந்த சிலுவையை
நேசிப்பேன்

எந்தன் தாலந்தெல்லாம்
படைப்பேன்

உம் சிலுவையை நான்
பற்றுவேன்

பின் அதால் கிரீடத்தை
அணிவேன்

2 பாரமாம் சிலுவை

பார்தலந் தள்ளினும்

எந்தன் நேசத்தின் சின்னமதே

தேவ ஆட்டுக்குட்டி

கல்வாரி மலையில்

பலியாகவே மாண்டனரே

3 என் பாவம் மன்னிக்க

என்னைச் சுத்தமாக்க

நேசர் மாண்ட சிலுவையதோ

தூய ரத்தம் தோய்ந்த

அந்தச் சிலுவையின்

அழகெத்தனை மாட்சிமை
பார்

4 உண்மையாய் சிலுவை

என்றுமே பற்றுவேன்

துன்பம் நிந்தையைச்
சகிப்பேனே

பின்பு விண்ணகத்தில்

தேவ மகிமையில்

நானும் சேர்ந்ததென்றும்
வாழுவேனே